# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

**15.04.2024**

## 16. தன்னை புறக்கணித்தவர்களே, அவருக்கு 'ஆமென்' கூறுவர்!

"யாதொன்றை குறித்தும் குறைசொல்லவோ அல்லது யாதொன்றைக் குறித்தும் 'நமக்கு இலகுவானதை' விரும்புவதோ ஆகிய, நம் சொந்த செயல் நடைபெற்றிட இடம் தரக்கூடாது!"

அவர் நம்மிடத்தில் நடத்தும் கிரியைக்கு, அப்படியே 'ஆமென்' என்று கூற பழகிவிட்டால், நித்தியமான சத்தியங்களை நாம் அனுபவிக்கும் இடத்திற்கு நம்மை நடத்திவிடும்! ஆகிலும் அவ்வாறு நம்மை நடத்தும் தேவனுடைய வழிகளை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கவும் கூடும்! ஆனால் நாமோ, அதை ஒருபொருட்டாக எண்ணி விடக்கூடாது!

– ரத்னம்